ஒரு மகத்தான மானிடத்தின் வரலாற்றுத் தடங்கள் இங்கே பதியப்படுகின்றது

# கோவிந்த நாமம்





பொன்னாலையைப் பிறப்பிடமாகவும் மூளாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்டு
வையத்தில் வரலாறு படைத்து மறைந்த
(ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகஸ்தர்)

அமரர்

## உயர்திரு மாதவர் கோவிந்தர் அவர்களின்

நீங்காத நினைவிற்காய் மலரும்
கோவிந்த நாமம் நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15.11.2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

பெற்று வளர்த்து பேணியெமைக் காத்துநின்று
உற்றதுணையாகி உயர்வெல்லாம் த ந்திட்டு
பற்றினைப் பரந்தாமன் பாதத்தில் வைத்தே
பறந்து போன எங்கள் குடும்பத் தலைவர்
அமரர் உயர்திரு மாதவர் கோவிந்தர் அவர்களின்
திருப்பாத கமலங்களிற்கு
இம்ம மலர்
சமர்ப்பணமாகுது!

காலத்தால் எங்களுக்கோர் தலைவரென வந்துதித்து
சாலச்சிறந்த கல்வி செல்வமெல்லாம் உவந்தளித்து
சீலத்தால் சிறந்திடவே சீர் சிறப்பு எமக்களித்த
கோலத்தால் சிறந்த எங்கள் கோவிந்தராம்
தந்தையார்
ஞாலத்துள் கடமைகளை நயம்படவே முடித்திட்டு
நீலவண்ணன் தாழ்சேர நீத்தராய் போனமையால்
ஓலத்தை விட்டவரின் நினைவெடுத்தோர் மலராக்கி
நூலதுவாய் சாத்துகின்றோம்
இதுபாத சமர்ப்பணமே!

இங்ஙனம்
குடும்பத்தவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

மனிதருள் மாணிக்கம்

அமரர் உயர்திரு மாதவர் கோவிந்தர் அவர்கள்

வெள்ளைத் திருமேனி வெளுத்திடாத புன்சிரிப்பு
அள்ளிக் கொடுக்கின்ற அருமையான திருக்கரங்கள்
உள்ளத்தில் உயர்ந்த எண்ணம் ஊர்க்குதவும் உயர்பண்பு – தன்னுள்
வெள்ளமெனக் கொண்டிருந்தார் கோவிந்தர் இவரேகாண்!

மண்ணகத்தில் மலராக
27
07
1935



விண்ணகத்தில் விளக்காக
16
10
2019

மகத்தானதோர் மானிடத்தின் உதாரண புருசன்

**அமரர். உயர்திரு.மாதவர் கோவிந்தர் அவர்களின் புனித ஆத்மாவை**

நாம் ஆண்டாண்டுதோறும் போற்றிப் பூசிப்பதற்கான

**திதி வெண்பா**

கோவிந்தர் என்றதொரு கோமகனார் மண்பிறந்து
மேவியதோர் இல்லறத்தில் மேன்மைபல கண்டிட்டு
தாவியோடித் தன்தலைவன் கண்ணனாரை அடைந்ததிதி - தமிழ்
பூவிரியும் புரட்டாதி அபர திருதியையாம் என்றேதுதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடமையில் கடமைவீரன்
அமரர் மாதவர் கோவிந்தர் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் மாதவர் கோவிந்தர் அவர்களின் வாழ்வியல் வரலாறு ஓர் அழியாத கல்வெட்டாகும்

ஒரு மனித வாழ்க்கை என்பது மிகச் சாதாரணமானதொன்றல்ல அது அருமையும் பெருமையும் மிக்கதாகும். இறைவனுடைய பிறப்புச் சக்கரத்தினுள்ளே புல்லாகிப், பூடாகி, புழுவாகி, மரமாகி பல்மிருகமாகி, பறைவையாய் , பாம்பாகி, கல்லாகி என்று எட்டுப் பிறப்புக்களையும் கடந்து ஒன்பதாவது பிறப்பாக எட்டுவதே இந்த மானிடப் பிறப்பாகும். எட்டிய அந்த மானிடப் பிறப்பு இறைவனுடைய சாயல் உடையதாகவும் இறைவனுடைய குணாதிசயங்கள் உடையதாகவும் இருத்தலே மானிடத்தின் சிறப்பாகும். இறைவனைப் போன்ற ஆற்றல் இல்லாவிட்டாவுலும் இறைவனுடைய சாயலும் குணாதிசயங்களும் இருப்பதால் மனிதர்களே நாம் முதலில் வணங்கும் கடவுளாவார். மனிதர்களைக் கடவுளென்று வழிபட்டு அதில் ஓர் பக்குவநிலை ஏற்பட்டால்தான் அடுத்து இறைவனை வணங்கும் படிமுறைக்கு நாங்கள் செல்ல முடியும். அவ்வாறு நாங்கள் வணங்குகின்ற மனிதர் மனிதனாகவே வாழ்பவராகவும் இறைவனுடைய குணாதிசயங்கள் இருப்பவராகவும் இருப்பாரேயானால் அவரை வணங்குவதன் மூலம் நாங்கள் மிக விரைவாக இறைவனை வணங்குகின்ற படிமுறைக்குள் சென்றுவிடலாம். அத்தகையதோர் வணக்கத்துக்குரிய மனிதராகவே நாங்கள் அமரர் மாதவர் கோவிந்தர் அவர்களைக் காண்கின்றோம். அவர் மனிதனாகவே வாழ்ந்தார். கடவுளின் சாயல் உடையவராகவும் கடவுளின் குணாதிசயங்கள் உடையவராகவும் இருந்தார் ஆதலினால் அவர் மறைந்த பின்னாலும் அவர் எங்களுக்கோர் வழிகாட்டியாக வாழவேண்டும் என்பதற்காகவே அவருடைய வரலாற்றுப் பதிவுகள் கல்வெட்டு என்ற பெயரிலே அழியாமல் இருக்க வேண்டுமென்பதற்காக இங்கே வெளியிடப்படுகின்றது.

கோவிந்தர் என்றதொரு கொள்ளையாளன் பிறந்திலரேல்
மேவிவரும் மானிடத்துப் பெருமைகளை அறிந்துமிரோம்
தாவியவர் வந்திந்தத் தரணிவாழ்வை வாழ்ந்ததனால்
சீவியத்தின் சிறப்புக்களை சீர்தூக்கி நன்கறிந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம் ஓதுவோமாக !

பஞ்சபுராணம் என்பது அதனை ஓதுவதன் மூலம் எமது புலன்களை ஒருநிலைப் படுத்தி உள்ளத்தினுள்ளே இருக்கின்ற அழுக்கினை அகற்றி உள்ளத்தினுள்ளே இறைவனுக்கோர் இருக்கை போடுவதாகும். அந்தப் பஞ்சபுராணத்தை மிகத் தெளிவாகப் பாடி தனக்குள்ளேயும் அதனைக் கேட்பவர்களுக்குள்ளேயும் இறைவனுக்கோர் இருக்கை போட்டவர்தான் அமரர் மாதவர் கோவிந்தர் அவர்களாவார். அதனால் அவருடைய ஆத்மீகப் பயணத்திற்குத் துணையாக நாம் பஞ்சபுராணம் ஓதுவோமாக



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நகரத்தில் இடர்ப்படோம் நடலையில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிமல்லோம்
இன்பமே என்னாளும் துன்பமில்லை
தாமார்க்கும் குடியல்லாத் தன்மையான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்மலர்ச் சேவடியினையே குறுகினோமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

கண்களிரண்டும் அவன்கழல்கண்டு களிப்பன ஆகாதே
காரிகையார்கள்தம் வாழ்விலென் வாழ்வு கடைப்படும் ஆகாதே
மணகளில்வந்து பிறந்திடுமாறு மறந்திடும் ஆகாதே
மாலறியா மலர்ப்பாதம் இரண்டும் வணங்குதும் ஆகாதே
பண்களி கூர்தரு பாடலோடாடல் பயின்றிடும் ஆகாதே
பாண்டிநன் நாடுடை யான்படை யாட்சிகள் பாடுதும் ஆகாதே
விண்களி உர்வதோர் வேதகம்வந்து வெளிப்படும் ஆகாதே
மீன்வலை வீசிய கானவன் வந்து வெளிப்படுமாயிடிலே!.

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன்செய் அம்பலத்தரசே
ஏறணிகொடியெம் ஈசனே உன்னை
தொண்டனே இசையுமாறிசையே!

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும்பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமைமணவாளனுக் காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்பஅன்பு வேண்டிப்
பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போது உன்
அடியின் கீழ் இருக்கவென்றார்.

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுக மொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடியார்கள் வினை தீர்த்தமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரனை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருநாசலம் அமர்ந்தபெரு மானே!

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன் முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான் மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் பணிபுரிந்தபோது
அமரர் உயர்திரு மாதவர் கோவிந்தர் அவர்கள்



திருகோணமலை பொலிஸ் நிலையத்தில் பணிபுரிந்தபோது
அமரர் உயர்திரு மாதவர் கோவிந்தர் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடவுளைக் காண்பதற்கோர் வழியுண்டு அறிந்திடுவீர்

நாங்கள் பிறந்து எத்தனை வருடங்கள் ஆகின்றன அத்தனை வருடங்களுக்குள்ளேயும் கடவுளை எங்களால் காணவே முடியவில்லை. அப்படியானால் இனி எப்போது காண்பது எப்படிக் காண்பது காண முடியும் காணத்தான் வேண்டும். எப்படியென்றால் அதற்கு ஒரு மார்க்கம் உண்டு. நாங்கள் உயிர்வாழ்வதற்கு காரணமாக இருப்பவர் கடவுளாவார். அதன் மறுபக்கத்தைப் புரட்டிப்பார்ப்போமேயானால் நாங்கள் உயிர் வாழ்வதற்கு காரணமாக இருப்பவை பஞ்சபூதம் என்று சொல்லப்படுகின்ற நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்று சொல்லப்படுபவை ஆகும். எனவே நாம் உயிர்வாழ்வதற்குக் காரணமாக இருக்கின்ற கடவுளும் பஞ்சபூதமும் ஒன்றேயாகும். பஞ்சபூதம் என்பது அடிமுடி கண்டு பிடிக்க முடியாத ஓர் விஸ்வரூபமாகும். ஒரு இடத்திலிருந்து ஒரு ஓசை வந்தால் ஓசை வந்த திசையிலே சென்று ஓசைக் குரியவரைக் கண்டு கொள்ள முடியுமல்லவா அதே போல பஞ்சபூதத்தின் செயற்பாடுகளை நாம் அவதானித்து நிலத்தைக் கடவுளின் பாதமாகவும் நீரைக் கடவுளின் இடுப்பாகவும் தீயைக் கடவுளின் வயிறாகவும் காற்றைக் கடவுளின் நெஞ்சாகவும் ஆகாயத்தைக் கடவுளின் சிரசாகவும் சிருஸ்டித்துப் பார்த்தால் அங்கே ஒரு விஸ்வரூப வடிவம் எங்களுக்குத் தெரிகின்றதல்லவா எனவே நாங்கள் உயிர் வாழ்வதற்குக் காரணமாக இருக்கின்ற பஞ்சபூதமே கடவுளின் வடிவமென்றும் கடவுளே பஞ்சபூதத்தின் வடிவமென்றும் ஐயந்திரிபுற உணர்ந்து கொண்டு எமது கண்ணுக்குத் தெரிகின்ற எம்மால் உணர்ந்து கொள்ள முடிகின்ற பஞ்சபூதத்தின் திசையிலே நாங்கள் செல்வோமேயானால் அதன் முடிவிலே பஞ்சபூதமாக இருக்கின்ற இறைவன் தன் விஸ்வ ரூபத்தை ஒடுக்கி சுய ரூபத்தை எங்களுக்குக் காட்டுவான். அப்போது நாங்கள் கடவுளைக் கண்டு கொள்ளலாம்.

ஓம் சிவாயநம!

(நாமும் நமதும் ஆண்டவன் சொத்து
அவனருள் ஒன்றே எமக்கரும் சொத்து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரணியில் தடம்பதித்த அமரர் மாதவர் கோவிந்தர் அவர்களின் வாழ்வியல் வரலாற்றுச் சுருக்கம்

கடலும் காடுகளும் களனிகளும் ஆலயங்களுமென அற்புதமாக விளங்குகின்ற பொன்னாமை தோன்றிப் பொன்னாலயத்தை உருவாக்கிய பொன்னாலைக் கிராமத்திலே வாழ்வியல் பற்றுறுதியோடு வாழ்ந்து எல்லோற்கும் பெருமை சேர்த்தவர்கள் மாதவர் நாகம்மா தம்பதிகளாவர். இவர்களுக்கு வா ழ்வியலில் கிடைக்கின்ற எல்லா வளங்களும் கிடைக்கப்பெற்றதோடு மிகப் பெரும் செல்வமான பிள்ளைச் செல்வங்களாக பதினொரு பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்கள் முறையே கிருஸ்ணர் என்றும் தங்கம்மா என்றும் சின்னம்மா என்றும் கோவிந்தர் என்றும் இராசம்மா என்றும் தெய்வானைப் பிள்ளை என்றும் இராஜேஸ்வரி என்றும் பரமேஸ்வரி என்றும் ஆனந்த வடிவேல் என்றும் சடாச்சராதேவி என்றும் சாரதா தேவி என்றும் அருமையும் பெருமையும் கொண்ட பெயர் கொண்டு விளங்கினார்கள் அமரர் மாதவர் நாகம்மா தம்பதிகளின் இந்தப் பதினொரு பிள்ளைகளுள்ளே நாம் இங்கே வாழ்வியல் வரலாற்றைப் பதிவு செய்ய விளைகின்ற அமரர் கோவிந்தர் அவர்கள் மாதவர் நாகம்மா தம்பதியர்களுக்கு நான்காவது பிள்ளையும் மகனுமாக 27.07.1935 ல் பிறந்தார்.

பல பெண் பிள்ளைகளுக்கு மத்தியிலே ஆண்பிள்ளையாகவும் அதிஷ்டகாரனாகவும் அமரர் கோவிந்தர் அவர்கள் பிறந்தமையால் பெற்றோர்கள் பெரு மகிழ்ச்சியும் உவகையும் கொண்டார்கள். அமரர் கோவிந்தர் அவர்களும் பெற்றோரின் விருப்பத்திற்கேற்ப பெற்றோரிடத்திலே பற்றுடையவராகவும், சகோதரங்களிடத்தில் மிகுந்த பாசமுடையவராகவும் கெட்டித்தனம் மிக்கவராகவும் வளர்ந்து வந்தார். சிறு வயதிலேயே மகனிடம் காணப்பட்ட பெரும் ஆற்றல்களை அவதானித்த அவரின் பெற்றோர்கள் அவருக்கு நல்ல அடிப்படைக் கல்வியை ஊட்ட விரும்பி அக்காலத்திலே கிராமத்திலே சிறந்ததோர் கல்விக்கூடமாக விளங்கிய பொன்னாலை வரதராஜப்பெருமாள் வித்தியாலயத்திலே சேர்த்து நல்ல அடிப்படைக் கல்வியை ஊட்டியதோடு மேற்படிப்பிற்காக அவரை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலும் சேர்த்து அடிப்படைக் கல்வியோடு நல்ல உயர்நிலைக் கல்வியையும் பெற்றுக் கொடுத்தார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் கோவிந்தர் அவர்கள் பெற்றோர்களதும் ஆசிரியர்களதும் அனுசரணையோடு கல்வியிலே வல்லவராகவும் கலைகளிலே வல்லவராகவும் மிளிர்ந்ததோடு விளையாட்டுத்துறையிலே மிக மிகத் திறமைசாலியாக வளர்ந்து தன் பெற்றோருக்கும் ஊருக்கும் ஆசிரியர்களுக்கும் தான் படித்த பாடசாலைகளுக்கும் மங்காப் புகழ் பெற்றுக் கொடுத்தார். மேலும் மேற்படிப்புகள் படிப்பதற்கு அமரர் கோவிந்தர் அவர்களுக்கு விருப்பமும் திறமைகளும் இருந்த போதிலும் தனது குடும்பம் மிகப் பெரிய குடும்பமாக இருந்ததாலும் இவ்வளவு காலமும்மை பாடுபட்டு தம்மை வளர்த்த பெற்றோருக்கு சற்று ஓய்வு கொடுக்க வேண்டுமென்ற அவாவினாலும் படித்த படிப்போடு ஒரு வேலை தேடும் முயற்சியில் இறங்கினார். முயற்சியின் பயனாக அமரர் கோவிந்தர் அவர்கள் 15.07.1955இல் பொலிஸ் திணைக்களத்திலே ஓர் பொலிஸ் உத்தியோகத்தராகப் பணியாற்ற தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையிலே அப் பொலிஸ் உத்தியோகத்தில் பணியாற்றத் தொடங்கினார்.

அமரர் கோவிந்தர் அவர்கள் இணைந்து கொண்ட பதவியின் நிமிர்த்தம் இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள பொலிஸ் நிலையங்களில் எல்லாம் சிறந்த முறையிலே உயர் அதிகாரிகளின் பாராட்டைப் பெறும் வகையிலே பணியாற்றியதோடு பொலிஸ் திணைக்கள விளையாட்டுக் குழுக்களிலேயும் அங்கம் வகித்து பல விருதுகளையும் பதக்கங்களையும் வென்று தனக்கும் தான் சார்ந்த திணைக்கள குழுக்களுக்கும் பெயரையும் புகழையும் பெற்றுக் கொடுத்தார். அமரர் கோவிந்தர் அவர்களின் உழைப்பினால் அவரது குடும்பம் சற்று தலை நிமிர்ந்தது. இருந்தாலும் அவ் வேளையிலே அமரர் கோவிந்தர் அவர்கள் திருமணப் பருவத்தை எட்டியிருந்தமையால் அவருக்குத் திருமணம் செய்துவைக்க வேண்டுமென விரும்பிய பெற்றோரும் சகோதரங்களும் உற்றார் உறவினர்களும் அவருக்கு ஏற்றதொரு இல்லத்தரசியை தேடும் முயற்சியை ஆரம்பித்தார்கள்.

அதன் விளைவாக அக் காலத்திலே பேரும் புகழும் பெற்று விளங்கிய மூளாய்க் கிரமத்திலே சீரோடும் சிறப்போடும் சகல வளங்களோடும் திகழ்ந்த தம்பதியர்களான பெரியதம்பி முத்துப்பிள்ளை தம்பதியர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளான பத்மநாதன், பரமேஸ்வரி, பற்குணராஜா, மகேந்திரன், இராஜெஸ்வரி, கணேசலிங்கம் ஆனந்தராஜா ஆகியோரின் சகோதரியும் மகளுமான பத்மாவதி அவர்களைத் தேர்ந்தெடுத்து எல்லோரது விருப்பத்திற்கும் இறைவனுடைய தீர்மானத்திற்கிசைவாகவும் 1968ம் ஆண்டு நல்லதொரு திருநாளிலே அமரர் கோவிந்தர் பத்மாவதி திருமணம் மிகச் சிறப்பாக நடந்தேறியது. தம்பதிகள் மிகவும் அன்னியோன்னியமாகவும் அன்போடும் பாசத்தோடும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு இல்லற வாழ்க்கையை நடத்தினார்கள். அமரர் கோவிந்தர் அவர்கள் ஒரு பொலிஸ் உத்தியோகத்தராக இருந்தமையால் தனது பாரியாரையும் இணைத்துக் கொண்டு இலங்கையில் பல பாகங்களிலும் கடமையாற்றியதோடு இனிய இல்லறமும் நடாத்தி வந்தார்.

அமரர் கோவிந்தர் பத்மாவதி தம்பதியர்கள் பற்றோடும் பாசத்தோடும் இனிய இல்லறம் நடாத்தி வருகின்ற காலத்திலே இல்லறத்தின் இனிய பலன்களாக இவர்களுக்கு நான்கு பெண் பிள்ளைகளும் ஒரு ஆண் மகனுமாக ஐந்து பிள்ளைகள் பிறந்தார்கள் அவர்களுக்கு முறையே விஜயலட்சுமி என்றும் விஜயகாந்தன் என்றும் விஜயகுமாரி என்றும் புவனேஸ்வரி என்றும் விஜயமலர் என்றும் பெயர் சூட்டி பிள்ளைகளை அன்போடும் பாசத்தோடும் அக்கறையோடும் வளர்த்தார்கள் அமரர் கோவிந்தர் அவர்கள் தன் பிள்ளைகள் ஐவர் மீதும் அபார பற்றுக் கொண்டவராக அவர்களைக் கல்வி கேள்விகளிலே வல்லவர்களாக்கி உயர்நிலைக்கு கொண்டு வந்ததோடு அவர்களின் உடல் ஆரோக்கியத்திலும் அக்கறை காட்டி வளர்த்து வந்தார். பிள்ளைகளும் தந்தையார்மீது பற்றும் பாசமும் கொண்டு வளர்ந்து வந்தார்கள்.

பொலிஸ் உத்தியோகத்திலிருந்து ஓய்வுபெற்று வந்த அமரர் கோவிந்தர் அவர்கள் ஊரிலே இருந்து கொண்டு கோயில் தொண்டுகள் செய்வதிலேயும் தேவார திருவாசகம் பாடுவதிலேயும் பஜனைகள் நடாத்துவதிலேயும் அக்கறையுடையவராக இருந்து கொண்டு பிள்ளைகளும் ஓரளவு திருமண வயதை அண்மிக்க அண்மிக்க அவர்களுக்கு நல் வாழ்க்கையை அமைத்துக் கொடுக்க அயராது பாடுபட்டு தனது மூத்த மகளான விஜயலட்சுமி அவர்களுக்கு தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுக்குள்ளேயே திரு தேவராஜா அவர்களை நிச்சயம் செய்து மணம் முடித்துக் கொடுத்து அவரைத் தனது மூத்த மருமகனாக்கிக் கொண்டதோடு அவர்களுக்கு அவர்களின் இல்லறப் பயனால் கிடைத்த செல்வங்களான சஞ்ஜீபன், சந்துஜன், சபிஷன் ஆகியோரையும் பேரக்குழந்தைகளாகக் கண்டு அவர்கள் லண்டன்மா நகரிலே சீரோடும் சிறப்போடும் வாழ்வது கண்டு ஒருவித மகிழ்ச்சியும் திருப்தியும் கொண்டு இருந்தார். அதே போலவே தனது இரண்டாவது பிள்ளையும் மகனுமான விஜயகாந்தன் அவர்கள் கல்வி கேள்விகளிலே வல்லவராகி உயர்ந்த ஸ்தானத்திலே இருக்கும்போது அவருக்கு சுகுணா அவர்களை மணம்பேசித் திருமணம் செய்து கொடுத்ததோடு அவரையும் தன் பாசத்திறகினிய மருமகளாக்கிக் கொண்டதோடு அவர்களுக்கு அவர்களின் இல்லறத்தின் விளைவால் உதித்த முத்துக்களான அபிஷனா, அஜந்தா, அபிஷன் ஆகியோரையும் பேரப்பிள்ளைகள் வரிசையிலே சேர்த்துக்கொண்டு அவர்கள் பிரான்ஸ் நாட்டிலே சீரோடும் சிறப்போடும் வாழ்வது கண்டு பேருவகையும் பெருமகிழ்ச்சியும் கொண்டிருந்தார்.

அடுத்ததாக மூன்றாவது பிள்ளையும் மகளுமான விஜயகுமாரி அவர்களுக்கு தன் உறவுக்குள்ளேயே திரு.சிவராசா அவர்களை மணம்பேசித் திருமணம் செய்து கொடுத்து அவரையும் தன் நேசத்திற்கினிய மருமகனாக்கிக் கொண்டதோடு அவர்களுக்கும் அவர்களின் வாழ்வியல் தத்துவத்தினால் கிடைத்த செல்வங்களான நிவேதா, நிலான், நிலானி ஆகியோரையும் பேரச்செல்வங்களாகப் பெற்றுக் கொண்டதோடு அவர்களும் சுவிஸ் நாட்டிலே வாழ்வமைத்து வளமாக வாழ்வது கண்டு பேரானந்தம் கொண்டிருந்தார். அவ்வாறே அமரர் கோவிந்தர் அவர்கள் தனது நான்காவது பிள்ளையும் மகளுமான புவனேஸ்வரி அவர்களுக்கு சிறப்புக்கள் பல நிறைந்த சுழிபுரம் கிராமத்திலே ஆசிரியர் திரு.குணசீலன் அவர்களை நிச்சயித்து திருமணம் செய்து கொடுத்து அவர்கள் தன் சுகநலன்களைக் கவனிக்கவும் சிறப்புற்று வாழவுங்கண்டு அவர்கள் மீது பற்றையும் பாசத்தையும் கொட்டி வாழ்ந்ததோடு மருமகன் குணசீலன் அவர்களை மருமகன் போலன்றி மகனாகவே மதித்து திருப்தியோடு வாழ்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தார். இறுதியாக தனது ஐந்தாவது பிள்ளையும் மகளுமாகிய விஜயமலர் (அபிவிருத்தி உத்தியோகஸ்தர்) அவர்களுக்கு ஓர் சிறந்த ஆசிரியரான திரு.மதியழகன் அவர்களை மணம் பேசித் திருமணம் செய்து கொடுத்து அவரையும் தன் பற்றிற்கும் பாசத்திற்குமுரிய மருமகனாக்கிக் கொண்டதோடு அவர்களுக்கும் அவர்களின் இல்லறத்தின் விளைவால் உதித்த உத்தமச் செல்வங்களான சுஜானி, சுஜாருகன் ஆகியோரையும் தன் பாசத்திற்கினிய பேரப்பிள்ளைகள் அணியிலே சேர்த்துக் கொண்டு மிக்க மகிழ்ச்சியோடும் திருப்தியோடும் வாழ்ந்து வந்தார்.

இவ்வாறு அமரர் கோவிந்தர் அவர்களுடைய வாழ்வும் வளமும் செழிக்க அவருடைய வம்சம் பெரு விருட்சமென தழைத்தோங்கியது. அன்னாரின் இறுதிக்காலங்களில் அவருக்குச் சில நோய்கள் ஏற்பட்டாலும் அவரின் கடைசி இரு மகள்மாரினதும் அவர்களின் கணவன்மாரினதும் அன்பு நிறைந்த பராமரிப்புகளாலும் கவனிப்புகளாலும் அவர் குணமடைந்து மிகுந்த ஆரோக்கியத்துடனும் மன மகிழ்ச்சியுடனும் வாழ்ந்து வந்தார். இந்த மகிழ்ச்சியை மேலும் இரட்டிப்புச் செய்வது போல் வெளிநாட்டில் வசிக்கும் பிள்ளைகள் வருடத்திற்கு ஒரு முறை வந்து அன்னாரை மகிழ்வித்துச் சென்றார்கள். ஒரு இல்லற வாழ்க்கையில் பெற வேண்டிய அனைத்தையும் பெற்ற பின்பு தன்னை இறைவன் அழைக்கிறான் என்பதை தனக்குள்ளேயே உணர்ந்து கொண்ட ஒரு தீர்க்கதரிசியான அமரர் கோவிந்தர் அவர்கள் தன்னைக் காலன் அழைக்கிறான் என்பதை குடும்பத்தாருக்கு கிட்டத்தட்ட மறைமுகமாக ஆறு மாதங்களாக தெரிவித்தும் ஏதோ சுகயீனத்தால் அவ்வாறு பேசுகின்றார் என்று கருதி அந்தத் தெய்வீகத் தத்துவத்தை குடும்பத்தாரால் உணர்ந்து கொள்ள முடியாது போய்விட்டது. அவரது இறப்பிற்குப் பின் தான் அந்த உண்மையை உணர முடிந்தது.

அமரர் மாதவர் கோவிந்தர் அவர்களை ஆண்டவன் அழைத்துக் கொண்டு போக இருக்கின்ற திகதி அன்றுதான் என்று யாருக்குத் தெரியும். வளமைக்கு மாறாக அமரர் அவர்கள் அன்று மிகவும் உற்சாகமாகவே காணப்பட்டார். அவருடைய முகத்திலே ஒருவித ஞான ஒளி வீசிக்கொண்டிருந்தது. இரவு உணவு அருந்தினார். வந்தவர்களோடு சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில் விடயங்கள் பேசி வழியனுப்பினார். மனைவியோடும் மக்களோடும் மருமக்களோடும் பேரப்பிள்ளைகளோடும் மகிழ்ச்சியாக அளவளாவிக்கொண்டு நித்திரைக்குச் சென்றார். நீண்ட உறக்கத்தில் ஆழ்ந்திருந்தார். அன்று 16.10.2019 அதிகாலை வேளை புள்ளினங்கள் எல்லாம் ஆரவாரித்துச் சிறகடித்துப் பறந்து கொண்டிருந்தன. தூரக் கேட்கின்ற ஆலயமணி ஓசையெல்லாம் இதயமணி ஒன்று ஓய்ந்துவிட்டது என்பதை பறைசாற்றுவது போல அண்மையிலே கேட்டுக் கொண்டிருந்தது. வானம் இருண்டுபோய் கண்ணீர் மழை சிந்திக் கொண்டிருந்தது. முற்றத்து மல்லிகையும் மலர்களும் மணம் வீச மறுத்தன தான தர்மங்களும் ஆலயப் பணிகளும் கொடைகள் பலவும் கொடுத்தவர் அல்லவா. அமரர் கோவிந்தர் இரவோடு இரவாக கண்ணன் வந்து அவற்றின் பலன்களையெல்லாம் தாரைவார்த்துக் கேட்டான் போலும் கொடுப்பதற்கு ஒருபோதும் தயங்காத அமரர் அவர்கள் அவற்றை எல்லாம் கொடுத்திருப்பார். அந்த அதிகாலை வேளை காலைத் தேனீர் கொடுப்பதற்காக மனைவியார் சென்று அப்பா அப்பா என்று ஓசை கொடுக்கின்றார் பதிலேதும் கிடைக்கவில்லை.

ஆம் நல்லதொரு குடும்பத்திலே மகனாகப் பிறந்து நல்ல சகோதரங்களுடன் வளர்ந்து நல்லதொரு உத்தியோகத்தில் அமர்ந்து பாசமும் நேசமும் மிக்க மனைவியோடு வாழ்ந்து அருமையும் பெருமையும் மிக்க பிள்ளைகளைப் பெற்றெடுத்து மதிப்பும் மரியாதையும் மிக்க மருமக்களைக் கண்டு செல்வத்துட் செல்வமான பேரப் பிள்ளைகளைச் சுமந்து ஆலயப்பணிகள் செய்து தானதர்மங்கள் கொடுத்து கேட்போர்க்கு இல்லையென்னாமல் வாரிவழங்கி சுமார் 85 ஆண்டுகளாக மற்றவர்களுக்காகவே பம்பரம்போல சுழன்று கொண்டிருந்த மாதவ மைந்தன் கோவிந்தர் அவர்கள் நிரந்தரமாகவே தன் இதய ஒலியை நிறுத்தி விட்டு வைகுந்தம் அடைந்தார் என்ற செய்தி கிட்டியது. எல்லோருடைய கண்களும் குளமாகின. ஒரு மாபெரும் மனிதயோதி மறைந்தது.

**அந்தக் கோவிந்த நாமம் எங்கும் எல்லோரிடத்திலும் எப்போதும் நிலைப்பதாக!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பொலிஸ் திணைக்களத்தால் இறுதி மரியாதையின் போது வழங்கப்பட்ட அமரர் கோவிந்தர் அவர்கள் பற்றிய நன்னடத்தை மடல்

தாய்நாட்டின் சமாதானம் ஒற்றுமை மற்றும் பாதுகாப்பின் நிமித்தமாகவும், மக்களின் உடமைகளைப் பாதுகாத்து நம்பிக்கைக்குப் பாத்திரமாகவும் வாழ்ந்த வாழக்கூடிய சமாதானமான சூழ்நிலையை உருவாக்கும் நோக்குடன் இலங்கைப் பொலிஸில் சேவையாற்றி ஓய்வு பெற்ற மூளாய் தெற்கு, சுழிபுரம், வட்டுக்கோட்டை எனும் விலாசத்தைச் சேர்ந்த ஓய்வு பெற்ற பொலிஸ் சார்ஜன் மாதவர் கோவிந்தர் அவர்கள் 2019.10.16 ஆம் திகதி இயற்கை மரணம் எய்தினார் என்பதனை மிகவும் மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மூளாய் தெற்கு, சுழிபுரம், வட்டுக்கோட்டை எனும் விலாசத்தில் வசித்த அமரர்களான மாதவர் மற்றும் நாகம்மா என்பவர்களுக்கு மகனாக 1935.07.27 ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பிறந்தார். இவர் ஆரம்பக் கல்வியை பொன்னாலை வரதராஜ வித்தியாலயத்திலும், உயர்கல்வியை யாஃவிக்ரோறியாக் கல்லூரியிலும் கல்வி கற்று 1955.07.15 ஆம் திகதி பொலிஸ் கொஸ்தாபல் ஆக களுத்துறை பொலிஸ் கல்லூரியில் பயிற்சி பெற்று பொலிஸ் சேவையில் இணைந்து கொண்டார். பின்பு 1965.08.26 ஆம் திகதி பொலிஸ் சார்ஜன் ஆக பதவி உயர்வு பெற்று அன்றிலிருந்து கொழும்பு, மஸ்கெலியா, புத்தளம், ஹற்றன், ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம் ஆகிய பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றியதோடு இவர் கடமையில் உள்ளபோது திறமையாக செயற்பட்டு இலங்கைப் பொலிஸிற்கு புகழைப்பெற்றுக் கொடுத்த ஒரு உத்தியோகத்தர் ஆவர். இவர் பெரியதம்பி முத்துப்பிள்ளையின் மகளாகிய பத்மாவதி என்பவரை 1968ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார். இவரின் இல்லறத்தின் பேறாக விஜயலட்சுமி, உதயகாந்தன், விஜயகுமாரி, புவனேஸ்வரி, விஜயமலர் ஆகியோரை பிள்ளைச் செல்வங்களாகப் பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் கடமையாற்றிய காலங்களில் பொறுமையுள்ள உத்தியோகத்தராகவும் சக சகோதரமொழி உத்தியோகத்தர்களுடன் நேசமாகவும் சகோதர பாசத்துடனும் உணர்வுபூர்வமாகவும் கடமையாற்றிய இவர் ஆசார சீலராகவும் நடத்தைகளில் ஒழுக்கம் நிறைந்த நல்லதொரு வாழ்க்கையை வாழ்ந்த ஒரு உத்தியோகத்தர் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவர் 1985.03.25 திகதி பொலிஸ் சேவையிலிருந்து ஓய்வு பெற்றபின் தனது சொந்த ஊரான மூளாய் தெற்கு, சுழிபுரம் வட்டுக்கோட்டை எனும் பிரதேசத்தில் இன்றுவரை வசித்து வந்த போது 2019.10.16ஆம் திகதி இயற்கை மரணம் எய்தினார்.

ஓய்வு பெற்ற பொலிஸ் சார்ஜன் அமரர் மாதவர் கோவிந்தர் அவர்களே நீங்கள் அன்பான நண்பர்களுக்கு ஒரு சிறந்த நண்பராகவும் அதே போல் இலங்கைத் தாய் நாட்டிற்கும் இலங்கைப் பொலிஸிற்கும் ஒரு சிறந்த மனிதராகவும் வாழ்ந்துள்ளீர்கள். !

ஓய்வு பெற்ற பொலிஸ் சார்ஜன் அமரர் மாதவர் கோவிந்தர் அவர்களே!

நீங்கள் சேவையிலிருந்த காலத்தில் ஆற்றிய அளப்பெரும் சேவையினை பொலிஸ் சேவையிலிருக்கும் நாங்கள் சூரியன் உதிக்கும் போதும் சூரியன் மறையும் போதும் பக்தியடனும் அன்புடனும் தங்களை நினைவு கூருவோம் என்று தெரிவித்துக் கொள்கின்றோம்.

உங்களுடைய ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பொலிஸ்மா அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும்போது ஒருவர் மற்றவர்களின் விருப்பத்திற்கு உரியவராக வாழ்ந்தால் வாழ்ந்து மறைந்த பின்னால் அவர் பற்றிய எண்ணங்கள் உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து உணர்வு பூர்வமாக வரும். அந்த வகையிலே தன் மனைவியின் விருப்பதற்திற்கு உரியவராக வாழ்ந்த அமரர் கோவிந்தர் பற்றிய நினைவுகள் அவரின் பாசத்திற்கினிய மனைவியாரின் உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து உணர்வுபூர்வமாக வருவதை நாங்கள் இங்கே காணலாம்.

**(முன்னுக்கு நீர்போதல் முறையென்றோ போய்விட்டீர்)**

**பாசமிகு மனைவியார்**

உன்னைநான் இறுதிவரை கண்கலங்க விடமாட்டேன்
என்றன்று எனக்களித்த சத்தியத்தை மறந்தீரோ
சென்றுவரும் போதெல்லாம் செல்லுமிடம் சொல்லும்நீர்
ஒன்றுமெனக் குரைக்காமல் ஓடியே மறைந்தீரோ
மன்னுலகில் எனைக்காக்க மாயவன்போல் வந்தவர்நீர்
இன்றென்னை இடைவழியில் தவிக்கவிட்டு மறைந்தீரோ
அன்புடைய என்னவரே நாயகரே கோவிந்தரே
முன்னுக்கு நீர் போதல் முறையென்றோ போய்விட்டீர்!

ஒரு தந்தை தன் பிள்ளைகளுக்காகவே வாழ்வாராக இருந்தால் அது தந்தைக்கும் மகிழ்ச்சி பிள்ளைகளுக்கும் மகிழ்ச்சி அவ்வாறு தன் பிள்ளைகளுக்காகவே வாழ்ந்து மகிழ்ச்சியடைந்த தந்தை மறைந்து விட்டால் அதைவிடத் துன்பம் பிள்ளைகளுக்கு வேறு ஒன்றுமில்லை. அதை அமரர் மாதவர் கோவிந்தர் அவர்களின் வாழ்வியலில் இருந்து நாம் அறிந்து கொள்ள முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (நல்லுணவும் நலம் பலவும் தந்திட்ட தந்தையாரே )

### மக்களின் துயரம்

அல்லும் பகலுமாய் அயராது உழைத்தெமக்கு
நல்லுணவும் நலம்பலவும் தந்திட்ட தந்தையாரே
வெல்லுமொரு வாழ்விலெமை வேரூன்ற வைப்பதற்காய்
கல்லிலும் முள்ளிலும் கால்பதித்த தந்தையாரே
செல்லமொழி பேசியெமை செகம்தனிலே காத்துநின்ற
வல்லவரே எம் தலைவரான கோவிந்தநாமத் தந்தையாரே
இல்லையின்று நீங்களொன்று நாம் தவித்து நிற்பதற்கோ
எல்லைகள் கடந்து நீங்கள் வைகுந்தம் அடைந்தீர்கள்

மருமக்களுடைய உறவென்பது மக்களுடைய உறவுக்குச் சமமானது. எனவே மருமக்கள் மாமனார்மீது மக்கள் வைத்திருக்கின்ற பாசம் மக்கள் வைத்திருக்கின்ற பாசத்தைவிட இன்னும் அதிகமாகவே இருக்கும் அத்தகையதொரு பாசப்பிணைப்பினை நாம் அமரர் மாதவர் கோவிந்தர் அவர்களிடம் அவரின் மருமக்கள் வைத்திருந்த பாசத்தினூடாகக் கண்டுகொள்ளலாம்.

## (மருமக்களின் மாறாத் துயர்)

மக்களோடு எங்களுக்கு மனநிறைவும் தந்தவரே
தக்கவழி காட்டியெமை தரணியிலே காத்தவரே
திக்கெட்டும் நாம்வாழ திசைகாட்டி நின்றவரே
மிக்கவே உயர்ந்த பாசம் எம்மிடத்தில் வைத்தவரே
சக்கரம்போல் தினம் சுழன்று கடமையெல்லாம் முடித்தவரே
பக்கத்துணை எல்லோர்க்கும் பகிர்நதளித்து வாழ்நதவரே
துக்கத்தை உம்பிரிவால் எமக்கெல்லாம் தந்திட்டு
செக்கச்சிவந்த தீயில் சங்கமித்தே போனீரோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரப்பிள்ளைகள் மீது பேரனார்கள் எப்போதும் அன்பும் பாசமும் உடையவர்களாகவே இருப்பார்கள் அதனால் பேரப்பிள்ளைகளும் பேரனார்களும் அடைகின்ற மகிழ்ச்சி என்பது அழவிடமடியாததாகவே இருக்கும். அந்த வகையிலே அமரர் மாதவர் கோவிந்தர் அவர்களாகிய பேரனாரும் அவருடைய பேரப்பிள்ளைகளும் ஒருவர் மேல் ஒருவர் உயிரையே வைத்திருந்தார்கள். அது சில வேளைகளில் பேரனாகிய அமரர் கோவிந்தர் அவர்களுடைய அமரத்து வத்தை தடுத்துமிருக்கலாம். ஆனால் தன்னோடு வாவென்று அமரர் கோவிந்தரை அழைத்தது தந்தைக்குத் தந்தையான கடவுளல்லவா அதனால்தான் அவர் மின்னி முளிப்பத ற்குள் ஓடி மறைந்துவிட்டார்.

**(கூர் மதியை எமக்களித்து குவலயத்தை நீத்தின்று**
**நீர் நிறைத்தீர் கண்களிலே பேரனாரே எங்குற்றீர் )**
**பேரப்பிள்ளைகள்**

பேர் படைத்த பேரனாராய் நீரெமக்கு இருந்ததனால்
　　கார்கறுக்க ஆடுமயில் போலநாங்கள் மகிந்திருந்தோம்
ஊர்முழுக்க உங்களுக்கோர் வேர்படர்ந்து இருந்ததனால்
　　சார்கிளையில் நாமெல்லாம் பூத்துமணம் கமழ்ந்துள்ளோம்
மார்பிலும் தோள்களிலும் எம்மைச் சுமந்த காரணத்தால்
　　பார்தனிலே உமை நாங்கள் தெய்மென்றே எண்ணிநின்றோம்
கூர்மதியை எமக்களித்து குவலயத்தை நீர்த்து நின்று
　　நீர் நிறைத்தீர் கண்களிலே பேரனாரே எங்குற்றீர்

கூடிப்பிறத்தல் என்பது ஒருவகையிலே கொடுத்து வைத்த ஒன்றுதான் அன்பினால் பாசத்தினால் குருதியினால் ஒன்றுபட்டவர்கள் அதைத்தான் தொப்பிள் கொடி உறவு என்பார்கள். அந்த உறவிலே இருப்பவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவருக்கு ஒன்றென்றால் மற்றவர்கள் துடித்துப் போவார்கள். அது ஒரு இனம்புரியாத பதைப்பாகும். அதையே தானாடாவிட்டாலும் தசையாடும் என்று சொல்வார்கள் அதை நாங்கள் அமரர் மாதவர் கோவிந்தர் அவர்களின் அமரத்துவத்தின் போது அவருடைய சகோதரர்களிடமிருந்து கண்டுகொண்டோம்.

**(நந்தலைவா நாலுபேர் சுமந்து போக நீ மறைந்தாய்**
**சொந்தமினி யாரெமக்கு சகோதரனே நீ பகர்வாய்)**
**கூடிப்பிறந்தவர்கள்**

தந்தைக்குத் தந்தையாக தரணியிலே எமை வளர்த்த
சந்திரனே சூரியனே சோதரரே கோவிந்தரே
மந்திரமும் மாயமும் ஏதுமின்றி உடல் வருந்தி
சுந்தர வாழ்விலெம்மைச் சுகம் தந்த சோதரனே
வந்தவர்கள் போவதுமோர் வரலாறு என்றறிந்தும்
சிந்தை கலங்கி நா ங்கள் சிறகொடிந்து வாடுகின்றோம்
நந் தலைவா நாலுபேர்கள் சுமந்தேக நீ மறைந்தாய்
சொந்தமினி யாரெமக்கு சொதரனே நீ பகர்வாய்

மைத்துனர்மார் மைத்துணிமார் உறவென்பது மிகப் புனிதமானது அது ஒருவித பயபக்தியோடு கலந்ததாகும் சில வேளைகளில் தந்தையாகவும் சில வேளைகளில் தாயாகவும் சில வேளைகளில் குருவாகவும் சில வேளைகளில் நல்லதொரு ஆலோசகராகவும் மாறி மாறி வருவதாகும். எப்படித்தான் இருந்தபோதிலும் அது ஒரு மரியாதைக்குரிய கௌரவமான உறவென்பதை அமரர் மாதவர் கோவிந்தர் அவர்களுடைய வாழ்விலிருந்து நாம் நன்கு அறிந்துகொள்ள முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (பத்திரமாய் உமதன்பை நாமெல்லாம் பாதுகாக்க
## வித்தாரமாய் நீரும் விடைபெற்றுச் சென்றீரோ)
## மைத்துனர் மைத்துனிமார்

மைத்துனராய் வந்தெம்மை வழிநடத்திச் சென்றவரே
மெத்தவே உயர்த பல புத்திமதி உரைத்தவரே
சித்தமுற எங்களது சீர்சிறப்பில் கலந்தவரே
சுத்தமான பாசத்தை சுடர்விளக்காய் எரித்தவரே
நித்தமெங்கள் நினைவுக்குள் நிளலாடி நிற்பவரே
அத்தாரே இத்தரையின் இணையில்லாப் புத்திரரே
பத்திரமாய் உமதன்பை நாமெல்லாம் பாதுகாக்க
வித்தாரமாய் நீரும் விடைபெற்றுச் சென்றீரோ!

விக்கிரக வழிபாட்டை பிழையென்றோ தவறென்றோ யாரும் கூறிவிட முடியாது. அதுதான் வழிபாட்டின் முதற்கட்டமும் படிமுறையுமாகும். ஆனால் மனிதர்களால் படைக்கப்பட்ட விக்கிரகங்களுக்கு நாங்கள் கொடுக்கின்ற மதிப்பையும் மரியாதையையும் கடவுளால் படைக்கப்பட்ட மனிதர்களுக்குக் கொடுப்பதில்லை. அதுதான் நெஞ்சை உறுத்துகிறது. நாங்கள் என்று கடவுளால் படைக்கப்பட்ட மனிதர்களுக்கு மரியாதையையும் மதிப்பையும் கொடுக்கிறோமோ அன்றுதான் எங்களால் படைக்கப்பட்ட விக்கிரகங்களில் பிரதிட்சையாவதற்கு இறைவன் சித்தமாவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேற்றம் கொள்வீர்

பிறப்பும் இப்பும் வாழ்க்கையிலே எல்லோர்க்கும் எல்லாவற்றிற்கும் உண்டு. பிறப்பிற்காக நாம் அஞ்சினோமோ அஞ்சவில்லையோ தாய்மை எம்மைப் பெற்றெடுக்கின்றது. அவ்வாறு பிறந்து வளர்ந்த நாங்கள் இறப்பிற்காக மட்டும் மிக மிக அஞ்சுகின்றோம். அதற்குக் காரணம் இறையுலகம் பற்றிய நம்பிக்கையின்மையாகும். இறைவனுடைய கிருபையிலிருந்தே நாங்கள் தோற்றம் பெற்றோம். அவ்வாறு தோற்றம் பெற்று மனிதர்களாக வாழ்ந்த நாங்கள் எமது தந்தையான இறைவனிடமே செல்வதற்கு ஏன் அஞ்சவேண்டும். நாங்கள் மனிதத்தையும் மனித நேயத்தையும் மதிக்காமல் வாழ்ந்து இறைவன் எம்மைப் படைத்ததன் நோக்கத்தை நிறைவு செய்யாமல் இருந்திருந்தால் நாம் கீழான பிறப்பொன்றை எடுக்கப் போகின்றோமே என்று இறப்பிற்காக அஞ்சத்தான் வேண்டும். அல்லாமல் நாங்கள் மனிதத்தையும் மனித நேயத்தையும் மதித்து இறைவன் எம்மைப் படைத்ததன் , நோக்கத்தை அமரர் மாதவர் கோவிந்தர் அவர்கள் போல நிறை செய்திருந்தால் இறப்பிற்காக நாங்கள் ஒருபோதும் அஞ்சவேண்டிய அவசியமே இல்லை. அது இறப்பென்ற பாதையினூடாக நாம் பயணிப்பது இறைவனிடமே!

காலத்தால் அழியாத கடமையெலாம் உமக்காற்றி
சாலச் சிறந்தவராய் இதயத்துள் புகுந்திருந்த
கோலத்தால் உயர்ந்தமகன் கோவிந்தராம் பெருந்தகையோன்
சீலத்து வாழ்வுதனை விட்டுவிட்டே மறைந்ததனால்
ஓலமிட்டும் ஒப்பாரி வைத்தும்நீர் கலங்கிவிடாதீர்
ஞாலத்து முதல்வனாம் மாயவனார் வந்தவரை
பாலகனாய்ச் சுமந்து கொண்டே வைகுபுந்த அடைந்திட்டார்
என்றறிந்து ஏற்றமுற ஆறித்தேறி வாழ்ந்திடுவீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெருந்தலைவர் அமரர் மாதவர் கோவிந்தர் அவர்களின் பிரிவினால்**

**ஏற்பட்ட துன்பங்கள் துயரங்களைத் துடைத்தெறிந்த விட்டு**

**அனைவர் மீதும் மங்களத்தை மலர்விப்போமாக!**

கோவிந்தர் என்றநாம ஆத்மாவிற்கு மங்களம்

தாவியோடி வந்தவரைத் தாங்கியோர்க்கு மங்களம்

பூவினோடு மாலைகட்டிப் போட்டவர்க்கு மங்களம்

பாவினோடு பேச்சளித்த பெரியவர்க்கு மங்களம்

மேவிவந்து அஞ்சலிகள் வெளியிட்டோர்க்கு மங்களம்

தூவமலர் இறுதிவணக்கம் செலுத்தியோர்க்கு மங்களம்

காவியுடல் சுமந்துகாடு ஏகியோர்க்கு மங்களம்

வாவியென வந்துகண்ணீர் சிந்தியோர்க்கு மங்களம்

ஆவிசாந்தி அடையவந்து வேண்டியோர்க்கு மங்களம்

கூவிக்குரல் கொடுக்க வந்த உறவுகட்கும் மங்களம்

மங்களம் மங்களம் மங்களமாம் மங்களம்

மாதவனார் பரம்பரையோர் அனைவருக்கும் மங்களம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க

என்று வாழ்த்துவோமாக

வாழியாம் மூளாயூர் மூத்தோன் வாழி
    வள்ளியொரு தெய்வானை வேலோன் வாழி
பூதேவி ஸ்ரீதேவி சமேத மாயோன் வாழி
    பொன்னி கர்த்த பொன்னாலைத் தலமூர் வாழி
வான்மழையும் வளர்நெருப்பும் நிலமும் வாழி
    வகையான காற்றதுவும் வான்மகளும் வாழி
காயத்திரி ஐயப்பனுறை தலமூர் வாழி
    வளர்சமய நெறி வாழி வாழி!

வான்முகில் வாழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளாந்தம் பயன்படுத்தும் பிறமொழிச் சொற்களும் அவற்றுக்குரிய தூய தமிழ்ச் சொற்களும்.

**உருது**

1. அலுமாரி - நிலைப்பேழை
2. உசார் - கவனம், விழிப்புணர்ச்சி
3. தபால் - அஞ்சல்
4. தயார் - அணியம்
5. மத்தாப்பு - தீப்பூ

**வடமொழி**

1. அஞ்சலி - வணங்குகை, தொழுகை
2. அதிதி - விருந்தாளி
3. அநாதை - ஏதிலி, காப்பிலான்
4. அமாவாசை - காரூலா
5. அனுதாபம் - இரக்கம், கழிவிரக்கம்
6. ஆத்திரம் - சினம்
7. இலஞ்சம் - கையூட்டு
8. குங்குமம் - செஞ்சாந்து

**எழினி – திரைச்சீலை**

சோபா ளுழகய - மெத்திருக்கை

பலூன் - பூதி

வாகனங்கள் - உந்துகள்

பென்சில் - கரிக்கோல்

கேக் (Cake ) - கட்டிகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. வெண்டிக்காயை உணவில் அடிக்கடி சேர்த்து வந்தால் நரம்புகள் வலிமை பெறும். மூளையின் இயக்கத்தைச் செம்மைப்படுத்துவதுடன் நல்ல ஞாபக சக்தியையும் உண்டாக்கும்.

2. அறுகம்புல் சாற்றை மோருடன் குடித்தால் நீரிழிவு குறையும். உலர் திராட்சையை வெதுவெதுப்பான தண்ணீரில் அரை மணி நேரம் ஊற வைத்து காலையில் அருந்தினால் மாதவிடாய் கோளாறுகள் இதய நோய் தீரும்.

3. புடலங்காயின் இலைச்சாறு காலையில் குழந்தைகளுக்கு கொடுப்பதனால் இருமல் குறையும். மலச்சிக்கல் நீங்கும். புடலங்காய் சமைத்து உண்பதால் தேவையில்லாத உடல் பருமன் குறையும்.

4.கரட் சாறும் சிறிது தேனும் பருகி வந்தால் கர்ப்பிணிப் பெண்களுக்கு வாந்தி மட்டுப்படும் கடுகை அரைத்து வலியுள்ள பகுதியில் போட்டால் வலி குறைந்து விடும்.

5. நுரையீரல் தொடர்பான நோய்கள் குணமாக வெற்றிலைச் சாற்றில் இஞ்சி சாற்றை சேர்த்து குடித்து வந்தால் நல்ல பயன் கிடைக்கும்.

6. சிறுநீரக கற்கள் உள்ளவர்கள் வாழைத்தண்டை வாரம் மூன்று முறை உணவில் சேர்த்து கொண்டால் சிறுநீரக கற்கள் எளிதாக கரைந்து விடும்.


7. இளநீர் தினமும் அருந்திவர கரைந்து என்றும் இளமையுடனும் மகிழ்ச்சியுடனும் இருக்க உதவும்.

8. இரத்த அழுத்தம் உள்ளவர்கள் மாம்பழம் சாப்பிட நல்ல பலன் கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் உயர்திரு மாதவர் கேவிந்தர் அவர்களின் வம்சாவழி




* அமரர்களைக் குறிக்கும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாங்கள் உங்கள் அனைவருக்கும்
## உளமார்ந்த நன்றிகளை உரித்தாகுகின்றோம்.

*எமது பாசத்திற்கினிய தந்தையாரும் குடும்பத் தலைவருமான அமரர் மாதவர் கோவிந்தர் அவர்கள் இவ்வுலகிலே வாழ்கின்ற காலத்திலே அவரை அன்போடு நேசித்துப் பழகியவர்கட்கும், அவர் இறைபதம் எய்திய செய்தி கேட்டு இல்லம் வந்து ஆகவேண்டிய அனைத்துக் கருமங்களையும் மேற்கொண்டவர்கட்கும், கொட்டுகின்ற மழையிலேயும் அலையலையாய்த் திரண்டு வந்து அனுதாபமும் அஞ்சலியும் செலுத்தியோர்கட்கும். கண்ணீர் அஞ்சலிகள் மலர்வளையங்கள் சாத்தி மரியாதை செய்தோர்கட்கும், தொடர்புசாதனங்கள் மூலம் துயர்பகிர்ந்தோர்கட்கும் இறுதி ஊர்வலத்தில் மயாணம்வரை வந்து ஆறுதல் அளித்தோர்கட்கும் வெளிநாடுகளிலுள்ள பிள்ளைகளின் இல்லம் வந்து அனுதாபம் தெரிவித்தோர்கட்கும், கடந்த முப்பது நாட்களும் இல்லம் வந்து அனுசரணை புரிந்தவர்கட்கும் இன்றைய அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளில் பங்கெடுத்து எமது தெய்வீகத் தலைவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்தவர்கட்கும் நாம் எமது காலத்தால் அழியாத நன்றிகளையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம். குறிப்பாக அமரர் அவர்களின் இறுதி நிகழ்வில் மரியாதை அணிவகுப்பு நடாத்திய பொலீஸ் திணைக்கள அனைத்து உத்தியோகஸ்தர்களுக்கும் எமது நன்றிகள் பலகோடி உரித்தாகட்டும்.*

இங்ஙனம்



நன்றியுடன் குடும்பத்தவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோவிந்த சாரம்

கடமைகளை தவறவிட்டுக் காலத்தைக் கடத்தாதீர்

காருண்யத்தை இதயத்துள் எங்கணுமே விதைத்திடுவீர்

கிருபைக்காய் இறைவனைத் தினந்தினம் வேண்டிடுவீர்

கீர்த்தியது கிட்டுமட்டும் முயற்சியைக் கைவிடாதீர்

குற்றம் காண்பதிலே குறியாக நிற்காதீர்

கூடிவாழ்தலையே கொள்கையாகக் கொண்டிடுவீர்

கெடுத்து வாழ்தலினை வாழ்வாக எண்ணிடாதீர்.

கேட்போர்க்குக் கொடுக்கின்ற கலையினைப் பயின்றிடுவீர்.

கைகொடுத்து உதவுதற்கே கையுண்டு என்றறிவீர்.

கொள்கை ஒன்றினோடு ஒட்டிவாழப் பழகிடுவீர்.

கோபத்தை உங்களுக்குள் நீங்களே அடக்கிடுவீர்.

கௌவியதோர் நற்பெயரை கைநழுவ விட்டிடாதீர்.

க் [இக்] கணமே நீங்களெல்லாம் இன்புற்று வாழ்வீர்கள்.

இவைகளே என் வாழ்க்கையின்
கோட்பாடும் கொள்கையுமாகும்.
மாதவர் கோவிந்தர்.

சாய்ராம் பிறிண்டேர்ஸ், சங்கானை. 0776915339

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org